எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1912 ௵ ஆனிமாசம் 25 ந் தேயிலன்று மத்தியானம் 12 மணிக்கு கொழும்புக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்புக் கச்சேரி,
1912 ௵ வைகாசி௴ 24 ந் உ.

ஜே. ஜி. பிரேஸர்,
மேல்மாகாணத்து அரசாட்சி ஏசன்று.

[Welgolla, Badulla District.]

1876 ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் ஒரு ரோட்டுக்கு என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இலக்கம் 175. குறிச்சி—வெல்கொல்ல.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 10a | — .. | தோட்டத்து ரோட்டு .. | உடுவற தேயிலைத்தோட்டத்தின் சொந்தக்காரன் .. | 0 0 16 |

| துண்டு. | காணியின் பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 10*b* | — .. | தோட்டத்து றேட்டு .. | உடுவெற தேயிலைத்தோட்டத்தின் சொந்தக்காரன் .. | 0 0 6 |
| 10*c* | — .. | கன்சவூாவா றேட்டு .. | ஷை .. | 0 0 2 |
| 10*d* | — .. | ஷை .. | ஷை .. | 0 0 13 |
| 12*a* | — .. | ஷை .. | ஷை .. | 0 0 5 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் வருஷத்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1912 ம் ஆடு ஆனிமாசம் 28 ந் தேதியிலன்று ஒரு மணிக்கு வதுளைக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

வதுளைக் கச்சேரி,
1912 ம் ஆடு வைகாசிமீ 23 ந் உ.

எவ். பாற்லெற்,
அரசாட்சி ஏசண்டு.

# PRELIMINARY NOTICES, WASTE LAND SETTLEMENT.

## உரிமைபெறும் பாழ்நிலத்தின் முன்னறிவித்தல்களைக் குறித்த விளம்பரங்கள்.

[Kurunegala Notice No. 4,416.]

இதன்பின் சொல்லப்படும் காணியில் எவ்வித உடந்தையாயினும் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள், 1912 ம் ஆடு (மே) வைகாசிமீ 24 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள், 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகள் வரையுள்ள பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் ஜே. எம். டேவிஸ்துரை அவர்களிடம் கொழும்பு கோட்டையிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனும் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு உரித்துப்பேசப்படாததாகிய சொல்லிய காணியை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

ஜே. எம். டேவிஸ்,
விசேஷ உத்தியோகத்தர்.

சுட்டிய காணியின் விவரம்.

வடமேல் மாகாணம் குருநாக்கல் டிஸ்திறிக் கிரியாலகத்பத்துவைச்சேர்ந்த மகாகல்பொடஎகொட கோறளையில் கல்கின்ன என்னுங் கிராமத்திலுள்ள இத்துடனிணைக்கப்படும் *படப்பிரதியில் விவரித்தபடியே 35 ஏக்கர் 26 பேட்சு விசாலமுடையதும், சாமானியமாய் மஹுவரகாவகேனேயாய என்னும் பெயரினால் அழைக்கப்பட்டு அல்லது அறியப்பட்டுவருவதும் 1,993 ம் பிரதமபடத்தில் F 987 ம் காணித்துண்டாய்க் காட்டப்பட்டதுமான காணி. இதற்கெல்லைகளாவன: வடக்கு-நெலுன்பத்கம கிராம எல்லை; கிழக்கு-உடகொடகம கிராம எல்லை; தெற்கு-உடகொடகம கிராம எல்லை மல எல, தெவத்த கிராம எல்லை; மேற்கு-தெதுருஓய, கல்கின்ன எல, ஓபடகொடுவ கிராம எல்லை.

கவனிப்பு.—மேற்சொல்லிய எல்லைகளுக்குட்பட்டதாகிய கீழ்க்குறிக்குங் காணித்துண்டு இவ்வறிவித்தலில் நின்று நீக்கப்பட்டிருக்கின்றதென்பதையும் அதின் விசாலத்தொகையாகும் 3 றூட்டு 37 பேட்சும் முன்குறித்த 35 ஏக்கர் 26 பேட்சுக்குள் அடங்கவில்லையென்பதையுங் கவனிக்கவேண்டியது:—

பிரதம படம் 1,993.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|
| G 987 .. | கல்கின்னேவெல .. .. .. | 0 3 37 |

* இங்கிலீசின் நான்காம் பாகம் 430 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

[Kurunegala S. O. 25—1912.]

[Kurunegala Notice No. 4,420.]

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள், 1912 ம் ஆடு (மேய்) வைகாசிமீ 31 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள், 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் ஜே. எம். டேவிஸ்துரை அவர்களிடம் கொழும்பு கோட்டையிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனும் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதனவற்றை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

ஜே. எம். டேவிஸ்,
விசேஷ உத்தியோகத்தர்.

சுட்டிய காணிகளின் விவரம்.

வடமேல் மாகாணம் குருநாக்கல் டிஸ்திறிக் கிரியாலைகத்பத்துவைச்சேர்ந்த மகாகல்பொட எகொட கோறளையில் ஓபடகொடுவ என்னுங் கிராமத்திலுள்ள இத்துடனிணைக்கப்படும் *படப்பிரதியில் விவரித்தபடியே, கீழ்க்குறிக்குங் காணித்துண்டுகள்:—

பிரதம படம் 1,993.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|
| 9939 .. | ஓபடகொடுவகேன .. .. .. .. | 13 1 18 |
| 9940 .. | ஓபடகொடுவவெல .. .. .. .. | 3 1 28 |
| | | 16 3 6 |

எல்லைகளாவன: வடக்கு-நெலுன்பத்கம கிராம எல்லை; கிழக்கு-நெலுன்பத்கம கிராம எல்லை, கல்கின்ன கிராம எல்லை; தெற்கு-கல்கின்ன கிராம எல்லை, கல்கின்னேஎல, தெதுரு ஓய; மேற்கு-தெதுரு ஓய, ஓபடகொடுவேஎல, நெலுன்பத்கம கிராம எல்லை.

* இங்கிலீசின் நான்காம் பாகம் 430 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

[Kurunegala S. O. 28—1912.]

( 2 )

[Kurunegala Notice No. 4,421.]

இதன்பின் சொல்லப்படும் காணியில் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள், 1912 ம் ஸு (மே) வைகாசிமீ 31 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள், 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் பாண்லிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் ஜே. எம். டேவிஸ்துரை அவர்களிடம் கொழும்பு கோட்டையிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனும் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லியசட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு உரித்துப்பேசப்படாததாகிய சொல்லிய காணியை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

ஜே. எம். டேவிஸ்,
விசேஷ உத்தியோகத்தர்.

சுட்டிய காணியின் விவரம்.

வடமேல் மாகாணம் குருநாக்கல் டிஸ்திறிக் கிரியாலே கதபத்துவைச்சேர்ந்த இகலவிசிதெகே கோறளேயில் பொலகம என்னுங் கிராமத்திலுள்ள இத்துடனணைக்கப்படும் *படப்பிரதியில் விவரித்தபடியே 1 றூட்டு 29 பேட்சு விசாலமுடையதும் சாமானியமாய் அம்மகாவளலவெல்ல என்னும் பெயரினுல் அழைக்கப்பட்டு அல்லது அறியப்பட்டு வருவதும் 1,805 ம் பிரதமபடத்தில் C 770 ம் காணித்துண்டாய்க் காட்டப்பட்டதுமான காணி. இதற்கெல்லைகளாவன: வடக்கும் கிழக்கும்-அமுனகாவ எல.; தெற்கு-முடியால் விற்கப்பட்ட மீகாமுளகேன, பஞகமுவேபண்டா உருத்தாடும் முதன்னபொதயாகும்புற; மேற்கு-சகெஞபிவியும் மற்றவர்களும் உருத்தாடும் மாவீதஞபொத, அமுனகாவ எல.

* இங்கிலீசின் நான்காம் பாகம் 431 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

[Kurunegala S. O. 29—1912.]

---

[Kurunegala Notice No. 4,422.]

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள், 1912 ம் ஸு (மே) வைகாசிமீ 31 ந் திகதி துவக்கம் மூன்று மாசத்திற்குள், 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் ஜே. எம். டேவிஸ்துரை அவர்களிடம் கொழும்பு கோட்டையிலிருக்கும் அவருடைய கந்தோரில், முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனும் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதனவற்றை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

ஜே. எம். டேவிஸ்,
விசேஷ உத்தியோகத்தர்.

சுட்டிய காணிகளின் விவரம்.

வடமேல் மாகாணம் குருநாக்கல் டிஸ்திறிக் கட்டுகம்பளை கதபத்துவைச்சேர்ந்த மெதபத்துகோறளை கிழக்கில் நாறன்கொட என்னுங் கிராமத்திலுள்ள இத்துடனணைக்கப்படும் *படப்பிரதிகளில் விவரித்தபடியே, கீழ்க்குறிக்குங் காணித்துண்டுகள் :—

I.—பிரதம படம் 370.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|
| 77e .. | மீகனகும்புறவத்த (ஞேட்டுக்குச் சேமிக்கப்பட்ட நிலம்) .. . .. | 0 0 7 |

எல்லைகளாவன: வடக்கு-லியனபதிரன்னுகலே அப்புகாமி உருத்தாடும் மீகனகும்புறவத்த; கிழக்கு-லியனபதிரன்னுகலே அப்புகாமி உருத்தாடும் மீகனகும்புறவத்த, ஓர் ஞேட்டு, லியனபதிரன்னுகலே அப்புகாமி உருத்தாடும் மீகனகும்புறவத்த; தெற்கு-லியனபதிரன்னுகலே அப்புகாமி விதானே உருத்தாடும் கல்மொறடுகேன, மேற்படியார் உருத்தாடும் காகடகாபிடியதெனிய; மேற்கு-புஞ்சிபண்டா உருத்தாடும் தொறகடகும்புறதெனிய.

II.—பிரதம படம் 370.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|
| 78f .. | காகடகாபிடியதெனிய (ஞேட்டுக்குச் சேமிக்கப்பட்ட நிலம்) .. .. | 0 0 3 |

எல்லைகளாவன: வடக்கு-புஞ்சிபண்டா உருத்தாடும் தொறகடகும்புறதெனிய; கிழக்கு-லியனபதிரன்னகலேஅப்புகாமி விதானே உருத்தாடும் காகடகாபிடியதெனிய; தெற்கு-பதிரன்னகலே அப்புகாமி உருத்தாடும் காகடகாபிடியதெனிய; மேற்கு-புஞ்சிபண்டா உருத்தாடும் தொறகடகும்புறதெனிய.

III.—பிரதம படம் 370.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|
| 81c .. | திக்கேனகல (கற்பார்) .. .. .. .. | 0 2 36 |

எல்லைகளாவன: வடக்கு-முடியால் விற்கப்பட்ட பாலகொலகேனவத்த, முடியால் விற்கப்பட்ட பாலகொலவத்த; கிழக்கு-முடியால் விற்கப்பட்ட கொலொன்கொலகேன, தவடாவ கிராம எல்லை; தெற்கு- முடியால் உருத்தாடும் திக்கேனவத்த; மேற்கு-முடியால் விற்கப்பட்ட மீகாகேன.

IV.—பிரதம படம் 370.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|
| 115al .. | தெகல்அதரேகல (கற்பார்) .. .. .. .. | 1 0 28 |

எல்லைகளாவன: வடக்கு-முடியால் உருத்தாடும் திரிவானுகேன்யாய; கிழக்கு-முடியால் உருத்தாடும் தெகல்அதரேகேன; தெற்கு-முடியால் உருத்தாடும் தெகல்அதரேகேன, முடியால் உருத்தாடும் மடுகாமுளகேன, முடியால் விற்கப்பட்ட கோன்காமுளகேன; மேற்கு-முடியால் உருத்தாடும் போகாமுளவத்த.

V.—பிரதம படம் 370.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|
| 115an .. | தெகல்அதரேகல (கற்பார்) .. .. .. .. | 0 3 23 |

எல்லைகளாவன: வடக்கு-முடியால் உருத்தாடும் திரவானகேன்யாய; கிழக்கு-முடியால் உருத்தாடும் திரவானகேன்யாய, முடியால் உருத்தாடும் மடுகாமுளவத்த; தெற்கு-முடியால் உருத்தாடும் கோன்காமுளகேன; மேற்கு-முடியால் உருத்தாடும் தெகல்அதரேகேன.

* இங்கிலீசின் நான்காம் பாகம் 431—432 ம் பக்கங்களின் படங்களைப் பார்க்குக.

[Kurunegala S. O. 30—1912.]

[Kurunegala Notice No. 4,423.]

இதன்பின் சொல்லப்படும் காணியில் எவ்வித உடந்தையாயினும் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள், 1912 ம் ஆு (மே) வைகாசிமாதம் 31 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள், 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகள் வரையுள்ள பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் ஜே. எம். டேவிஸ்துரை அவர்களிடம் கொழும்பு கோட்டையிலிருக்கும் அவருடைய கந்தோரில் முக முகமாயேனும் எழுத்து மூலமாயேனும் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு உரித்துப்பேசப் படாததாகிய சொல்லிய காணியை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

ஜே. எம். டேவிஸ்,
விசேஷ உத்தியோகத்தர்.

சுட்டிய காணியின் விவரம்.

வடமேல் மாகாணம் குருநாக்கல் டிஸ்திறிக் கட்டுகம்பளை கத்பத்துவைச்சேர்ந்த மெதபத்துகோறளை மேற்கில் யட்அத்தாவள என்னுங் கிராமத்திலுள்ள இத்துடனிணைக்கப்படும் *படப்பிரதியில் விவரித்தபடியே 1 ஏக்கர் 26 பேர்ச் விசாலமுடையதும், சாமானியமாய் விந்தகாவபிடியகேன என்னும் பெயரினால் அழைக்கப்பட்டு அல்லது அறியப்பட்டு வருவதும் 330 ம் பிரதமபடத்தில் 13*ad* ம் காணித்துண்டாய்க் காட்டப்பட்டதுமான காணி. இதற்கெல்லைகளாவன: வடக்கு-முடியால் விற்கப்பட்ட பகலகமகேன; கிழக்கு-சுவசிங்கே முதியான்செலாகே அப்புகாமி உருத்தாடும் பகலகம வத்த; தெற்கு-முடியால் விற்கப்பட்ட விந்தகாவபிடியவத்த, முடியால் விற்கப்பட்ட விந்தகாவபிடியகால; மேற்கு-தெலம் புகமுவவிலிருந்து போகும் ரேட்டு.

* இங்கிலீசின் நான்காம் பாகம் 433 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.
[Kurunegala S. O. 31—1912.]

---

[Kurunegala Notice No. 4,424.]

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டென உருத்திப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள், 1912 ம் ஆு (மேய்) வைகாசிமீ 31 ந்தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள், 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் ஜே. எம். டேவிஸ்துரை அவர்களிடம் கொழும்பு கோட்டையிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனும் தங்களுககுண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதனவற்றை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

ஜே. எம். டேவிஸ்,
விசேஷ உத்தியோகத்தர்.

சுட்டிய காணிகளின் விவரம்.

வடமேல் மாகாணம் குருநாக்கல் டிஸ்திறிக் வாயுடவில்லிகத்பத்துவைச்சேர்ந்த வாயுட கோறளையில் போயகொட என்னுங் கிராமத்திலுள்ள இத்துடனிணைக்கப்படும் *படப்பிரதிகளில் விவரித்தபடியே, கீழ்க்குறிக்குங் காணித்துண்டுகள் :—

பிரதம படம் 1,087.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. ரூ. ப. |
|---|---|---|
| 33*d* .. | கன்சபாவரேட்டு (ரேட்டு) .. .. .. .. | 0 1 38 |

எல்லைகளாவன: வடக்கு-கெட்டிபொல கிராம எல்லை, ராஜபக்ஸதுரயலாகே டிகிரிதுரயா உருத்தாடும் குரிகொடுவ பில்லாவ, மேற்படியார் உருத்தாடும் குரிகொடுவகும்புற, மேற்படியார் உருத்தாடும் குரிகொடுவபில்லாவ, எகனாயக முதியன்செலாகே போயகொட டிகிரிபண்டா உருத்தாடும் பதுள்ளவளபில்லாவ; கிழக்கு-எகனாயக் முதியன்செலாகே லொகு பண்டாவும் இன்னுமொருவரும் உருத்தாடும் கமன்தேபில்லாவ, கந்தேவெதாலாகே கிரிபுஞ்சாவும் இன்னுமொருவரும் உருத்தாடும் கமன்தேபில்லாவ; பொயேகொட றடேமகத்மயாவும் மற்றவர்களும் உருத்தாடும் கெட்டியாகேவத்த; தெற்கு-ஓர் ரேட்டு; மேற்கு-கந்தேவெதாலாகே கிரிபுஞ்சாவும் இன்னுமொருவரும் உருத்தாடும் கமன்தேபில்லாவ, எகனாயக முதியன்செலாகே லொகுபண்டாவும் இன்னுமொருவரும் உருத்தாடும் கமன்தேபில்லாவ, உடவறகட ராஜபக்ஸதுரய லாகே டிகிரிதுரயா உருத்தாடும் இகலகஸ்இன்ன, ராஜபக்ஸதுரயலாகே புஞ்சிதுரயா உருத்தாடும் பிடியாகும்புறகேன, கெட்டிபொல கிராம எல்லை.

II.—பிரதம படம் 1,087.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. ரூ. ப. |
|---|---|---|
| 43 .. | வாயுடகந்தேமூகலான .. .. .. .. | 62 3 17 |

எல்லைகளாவன: வடக்கு-எகனாயக் முதியன்செலாகே கிரிபண்டா பழைய ரெஜிஸ்டிரர் உருத்தாடும் நுககாமுள்ள வத்த, தென்னகோன் முதியன்செலாகே அப்புகாமி உருத்தாடும் தென்னகோன்கெதரவத்த, போயேகொடவிலிருக்கும் எகனாயக முதியன்செலாகே டிங்கிரிபண்டா உருத்தாடும் கொகுதுஆராச்சிலாகே கபெல்ல, எகனாயக முதியன்செலாகே டிங்கிரிபண்டா உருத்தாடும் கொகுதுஆறச்சிலாகே கபெல்ல, போயகொடவிலிருக்கும் எகனாயக முதியன்செலாகே டிங் கிரிபண்டா உருத்தாடும் கந்தேவத்த, 208,545 ம் உரிமைப்படத்திற் காணும் காணி, ஆர். பீ. பொயேகொடவும் இன்னொருவரும் உருத்தாடும் எடிகெருகல்கேன, 208,545 ம் உரிமைப்படத்தில் காணும் காணி; கிழக்கு-உடகொட்டமுள்ள கிராம எல்லை; தெற்கு-மத்தியமாகாண எல்லை, 137,619 ம் உரிமைப்படத்தில் காணும் காணி, எகனாயக முதியன்செலாகே கிரி பண்டாவும் இன்னுமொருவரும் உருத்தாடும் கந்தேகேன, 136,822 ம் உரிமைப்படத்தில் காணும் காணி; மேற்கு-மத்திய மாகாண எல்லை, மாறகட கிராம எல்லை.

III.—பிரதம படம் 1,087.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. ரூ. ப. |
|---|---|---|
| 46 .. | கந்தேகேன (பழையரேட்டுக்குச் சேமிக்கப்பட்ட நிலம்) .. .. | 0 0 20 |

எல்லைகளாவன: வடக்கு-எகனாயக முதியன்செலாகே கிரிபண்டாவும் இன்னுமொருவரும் உருத்தாடும் கந்தே கேன; கிழக்கு- 137,619 ம் உருமைப்படத்திற் காணும் காணி; தெற்கு-மத்தியமாகாண எல்லை; மேற்கு-137,619 ம் உரு மைப்படத்திற் காணும் காணி.

* இங்கிலீசின் நான்காம் பாகம் 433—434 ம் பக்கங்களின் படங்களைப் பார்க்குக.
[Kurunegala S. O. 32—1912.]

[Kurunegala Notice No. 4,425.]

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினும் தங்களுக்குண்டெனை உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள், 1912 ம் ஞூ (மே) வைகாசிமீ 31 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள், 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற படுத்திய விசேஷ உத்தியோகத்தர் ஜே. எம். டேவிஸ் துரை அவர்களிடம் கொழும்பு கோட்டையிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனும் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரி வியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதனவற்றை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத் திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

ஜே. எம். டேவிஸ்,
விசேஷ உத்தியோகத்தர்.

---

சுட்டிய காணிகளின் விவரம்.

வடமேல் மாகாணம் குருநாக்கல் டிஸ்திறிக் கிரியாலேகத்பத்துவைச்சேர்ந்த இகலவிசிதெகே கோறளேயில் யக் கல்ல என்னுங் கிராமத்திலுள்ள இத்துடனிணைக்கப்படும் *படப்பிரதிகளில் விவரித்தபடியே, கீழ்க்குறிக்குங் காணித் துண்டுகள் :—

I.—பிரதம படம் 1,189.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|
| 2 .. | குரந்தகாமுளவள அல்லது வெவ (குளம்) .. .. .. | 1 1 22 |

எல்லைகளாவன: வடக்கும் கிழக்கும்-மீ. கு. கமீதும் இன்னுமொருவரும் உருத்தாடும் தமுனுகொல்லேயாய தெற்கு-முடியால் உருத்தாடும் வேகந்தவும் எலகந்தவும் (குளக்கட்டும் வாய்க்காலும்) ; மேற்கு-கோறுர முதியன்செலா கே உக்குபண்டா உருத்தாடும் கலகாவவத்த அல்லது தமுனுகொல்லேயாய.

II.—பிரதம படம் 1,189.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|
| 3 .. | எல (நீரோட்டம்) .. .. .. .. | 1 3 32 |
| 4 .. | வேகந்தேயாயே மூகலான .. .. .. .. | 13 3 29 |
| 5 .. | வேகந்தேயாய .. .. .. .. | 4 1 5 |
| 6 .. | வேகந்தவும் எலகந்தவும் (குளக்கட்டும் வாய்க்காலும்) .. .. | 12 2 36 |
| | | 32 3 22 |

எல்லைகளாவன: வடக்கு-போறமுள்ள கோறுர முதியன்செலாகே உக்குபண்டா உருத்தாடும் கலகாவவத்த அல்லது தமுனுகொல்லேயாய, முடியால் உருத்தாடும் குரந்தகாமுள அல்லது வெவ (குளம்), மீ. கு. கமீதும் இன்னு மொருவரும் உருத்தாடும் தமுனுகொல்லேயாய, ஓர் தண்ணீர் யந்திரம்; கிழக்கு-பத்தலகொட கிராம எல்லை, முடியால் உருத்தாடும் பொரலுவேமூகலான, முடியால் உருத்தாடும் போருலுவே மூக்கலான, பத்தலகொட கிராம எல்லை; தெற்கு-இங்குருவத்த கிராம எல்லை, பத்தகனே கிராம எல்லை; மேற்கு-முடியால் உருத்தாடும் எத்தபண்டார பின்துன்கட என் னும் நீரோட்டம், (நீரோட்டம்), முடியால் உருத்தாடும் போருளுவேமூக்கலான, முடியால் உருத்தாடும் எல என்னும் நீரோட்டம் (நீரோட்டம்), முடியால் உருத்தாடும் போருளுவே மூக்கலான, முடியால் உருத்தாடும் கொன்கும்புறேவத்தே, மீ. கு. காமிதுவும் மற்றவ ரொருவராலு முருத்தாடும் கொன்கும்புறே, முடியால் உருத்தாடும் கொன்கும்புறேவத்த, 250,152 ம் உரிமைப்படத்தில் காணும் காணி, முடியால் உருத்தாடும் வேகண்டேயாயக்கலே, முடியால் உருத்தாடும் யக் கல்லே எல என்னும் நீரோட்டம் (நீரோட்டம்), 250,152 ம் உருமைப்படத்திற் காணும் காணி, முடியால் உருத்தாடும் அமுணபிற்றியேவத்த, முடியால் உருத்தாடும் எற்கலகேனே அல்லது அமுணபிற்றியேவத்த, முடியால் உருத்தாடும் அமு ணபிற்றியேவத்தேகேனே, கோறுற முதியன்செலாகே டிங்கிரிபண்டாவும் மற்றொருவராலும் உருத்தாடும் பொல்பிற்றிய வத்த, முடியால் உருத்தாடும் பொல்பிற்றியேவத்த (சேமிக்கப்பட்ட நிலம்), ஓர் நீரோட்டம், கோறுற முதியான்செலாகே டிங்கிரிபண்டாவும் மற்றவர்களாலு முருத்தாடும் மில்லமாடக்கும்புற, முடியால் விற்கப்பட்ட வெற்றகாயமடேபில்லாவ, 250,158 ம் உருமைப்படத்தில் காணும் காணி.

III.—பிரதம படம் 1,189.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|
| 7 .. | வேகண்டேயாயகல்லே .. .. .. .. | 0 0 16 |
| 7½ .. | வேகண்டேயாயகல்லே (பழைய நீரோட்டத் தரை) .. .. | 0 0 14 |
| | | 0 0 30 |

எல்லைகளாவன: வடக்கு-முடியால் உருத்தாடும் வேகண்டே, எலகண்டே (குளக்கட்டும் வாய்க்காலும்); கிழக்கு-பத்தலகொட கிராம எல்லை, குளம்; தெற்கு-முடியால் உருத்தாடும் வேகண்டே எலகண்டே (குளக்கட்டும் வாய்க்கா லும்), முடியால் உருத்தாடும் கொன்கும்புறேவத்த; மேற்கு-மீ. கு. காமிதுவும் மற்றவர்களும் உருத்தாடும் கொன்கும்புறே வத்தே, 250,152 ம் உரிமைப்படத்தில் காணும் காணி, முடியால் உருத்தாடும் யக்கல்லே எல நீரோட்டம் (நீரோட்டம்), 250,152 ம் உரிமைப்படத்தில் காணும் காணி, முடியால் உருத்தாடும் (நீரோட்டம்) எல.

IV.—பிரதம படம் 1,189.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|
| 25*e* .. | பொல்பிற்றியவத்த (நீரோட்டம் சேமிக்கப்பட்ட நிலம்) .. .. | 0 0 30 |
| 25*k* .. | நீரோட்டம் சேமிக்கப்பட்ட நிலம் .. .. .. | 0 0 7 |
| 26*a* .. | ஷை .. .. .. .. | 0 1 30 |
| | | 0 2 27 |

எல்லைகளாவன: வடக்கு-ஓர் எல, முடியால் உருத்தாடும் வேகண்ட எலகண்ட (குளகட்டும் வாய்க்காலும்), சோறுற முதியான்செலாகே டிங்கிரிபண்டாவும் மற்றவர்களும் உருத்தாடும் பொல்பிற்றியாவத்த, மீ. கு. காமிதுவும் மற்றவர்களும் உருத்தாடும் மில்லமாட, முடியால் விற்கப்பட்ட மில்லமாடவத்த, மீ. கு. காமிதுவும் மற்றவர்களும் உருத் தாடும் மில்லமாடவத்த, முடியால் உருத்தாடும் அமுணபிற்றியவத்த, முடியால் உருத்தாடும் அமுணபிற்றியேவத்தேகேனே; தெற்கு-ஓர் எல, முடியால் உருத்தாடும் அமுணபிற்றியவத்த; மேற்கு-முடியால் உருத்தாடும் கொக்கோறவத்தகும்புற பில்லாவ, ஓர் எல.

* இங்கிலீசின் நான்காம் பாகம் 435—440 ம் பக்கங்களின் படங்களைப் பார்க்குக.

V.—பிரதம படம் 1,189.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. ரூ. ப. |
|---|---|---|
| 29 | யக்கல்லே எல (நீரோட்டம்) | 0 0 14 |

எல்லைகளாவன: வடக்கு-முடியால் உருத்தாடும் ஓர் எல (நீரோட்டம்); கிழக்கு-முடியால் உருத்தாடும் வேகன்டேயாயக்கேல; தெற்கு-250,152 ம் உரிமைப்படத்தில் காணும் காணி; மேற்கு-முடியால் உருத்தாடும் யக்கல்லே எல, குடஓயா (நீரோடடம்), 250,152 ம் உரிமைப்படத்தில் காணும் காணி.

VI.—பிரதம படம் 1,189.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. ரூ. ப. |
|---|---|---|
| 30 | யக்கலேஎலவும் கன்டஓயாவும் (நீரோட்டங்கள்) | 3 3 36 |

எல்லைகளாவன: வடக்கு-கொட்டவேகற கிராம எல்லை, 258,222 ம், 248,997 ம், 160,189 ம், 246,521 ம், 246,520 ம், 246,519 ம், 246,518 ம், 246,517 ம், 246,516 ம், 246,515 ம், 246,514 ம், 246,513 ம், 246,512 ம், 246,511 ம், 246,510 ம், 246,509 ம், 246,508 ம் உரிமைப்படங்களில் காணும் காணிகள், முடியால் விற்கப்பட்ட மில்லமடேகேன, போறமுள்ளே கிராம எல்லை, முடியால் விற்கப்பட்ட மில்லமடேகேன, 272,444 ம், 248,080 ம், 272,550 ம், 248,532 ம் உரிமைப்படங்களில் காணும் காணிகள், மீ. கு. காமிதுவும் மற்றொருவராலு முருத்தாடும் கோனிமுல்லேவெலபில்லாவ; கிழக்கு-250,152 ம் உரிமைப்படத்தில் காணும் காணி, முடியாலுருத்தாடும் யக்கலஎல, 250,152 ம் உரிமைப்படத்தில் காணும் காணி: தெற்கு மீ. கு. காமிதுவும் மற்றவர்களுமுருத்தாடும் கொன்கொம்புறேவத்த, முடியாலுருத்தாடும் கொன்கொம்புறேவத்த, மீ. கு. காமிதுவும் மற்றவர்களுமுருத்தாடும் கொன்கும்புறே, முடியாலுருத்தாடும் கொன்கும்புறேவத்த, முடியாலுருத்தாடும் யற்றியெலகேன, முடியால் விற்கப்பட்ட யக்கெல்லவத்த, எயிற்றபண்டாறபின்துன்கண்டஎல (நீரோட்டம்), 248,997 ம், 245,168 ம் உரிமைப்படங்களில் காணும் காணிகள்; மேற்கு-போலகம கிராம எல்லை.

VII.—பிரதம படம் 1,189.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. ரூ. ப. |
|---|---|---|
| $20\frac{1}{3}$ | போருலுவஊக்கலான | 0 1 4 |
| 32 | எயிற்றபண்டாரபின்துன்கடஎல (நீரோட்டம்) | 1 2 3 |
| | | 1 3 7 |

எல்லைகளாவன: வடக்கு-முடியால் விற்கப்பட்ட யக்கல்லேவத்த, முடியாலுருத்தாடும் யற்றியெல்கேன, முடியாலுருத்தாடும் கொன்கும்புறேவத்த, முடியாலுருத்தாடும் போருலுவேஊக்கலான, 203,919 ம் உரிமைப்படத்தில் காணும் காணி, முடியாலுருத்தாடும் போருலுவேஊக்கலானை; கிழக்கு-203,919 ம் உரிமைப்படத்தில் காணும் காணி, முடியாலுருத்தாடும் போருலுவேஊக்கலானை. 203,919 ம் உரிமைப்படத்தில் காணும் காணி, முடியாலுருத்தாடும் போருளுவேஊகக லான, பத்தலகொட கிராம எல்லை, முடியாலுருத்தாடும் போருளுவேஊக்கலான, 203,919 ம் உரிமைப்படத்தில் காணும் காணி, முடியாலுருத்தாடும் போருளுவேஊக்கலான, பத்தலகொட கிராம எல்லை, இங்குறுவத்த கிராம எல்லை, பத்தகன கிராம எல்லை; தெற்கு-பத்தகன கிராம எல்லை, கும்புலன்கே கிராம எல்லை, முடியாலுருத்தாடும் யக்கலேவத்த; மேற்கு-முடியாலுருத்தாடும் யக்கலேவத்த, 245,168 ம் உரிமைப்படத்திலுள்ள காணி, முடியால் விற்கப்பட்ட யக்கல்லேவத்த, 245,168 ம் உரிமைப்படத்தில் உள்ள காணி, எயிற்றபண்டாற பின்துன்கடஎல (நீரோட்டம்).

VIII.—பிரதம படம் 1,189.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. ரூ. ப. |
|---|---|---|
| 33 | எல | 1 1 7 |

எல்லைகளாவன: வடக்கு-முடியாலுருத்தாடும் கொன்கும்புறேவத்த்த, முடியாலுருத்தாடும் போருலுவேஊக்கலான; கிழக்கு-203,919 ம் உரிமைப்படத்தில் காணும் காணி, முடியாலுருத்தாடும் போருலுவேஊக்கலான், முடியாலுருத்தாடும் வேகன்டேயும் எலகன்டேயும் (குளகட்டும் நீர்வாய்க்காலும்); தெற்கு-முடியாலுருத்தாடும் போருளுவேஊககலான, 203,919 ம் உரிமைப்படத்தில் காணும் காணி; மேற்கு-203,919 ம் உரிமைப்படத்தில் காணும் காணி.

IX.—பிரதம படம் 1,189.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. ரூ. ப. |
|---|---|---|
| 22 | போருளுவேஊக்கலான (குளத்துக்காகச் சேமிக்கப்பட்ட நிலம்) | 7 3 6 |

எல்லைகளாவன: வடக்கு-முடியாலுருத்தாடும் வேகன்டவும் எலகன்டவும் (குளக்கட்டும் நீர்வாய்க்காலும்); கிழக்கு-குளக்கட்டு, பத்தலகட கிராம எல்லை, ஓர் குளம், ஓர் குளக்கட்டு, பத்தலகொட கிராம எல்லை, இங்குறுவத்த கிராம எல்லை; தெற்கு-பத்தகனே கிராம எல்லை, முடியாலுருத்தாடும் எயிற்றபண்டாரபின்துன்கட எல (நீரோட்டம்), பாழ்நிலச்சட்டங்களின் பிரகாரம் முடிக்குரியதெனப் பிரசித்தம்பண்ணப்பட்ட போருளுவேஊக்கலான, முடியாலுருத்தாடும் எயிற்றபண்டாரபின்துன்கடஎல (நீரோட்டம்), பாணிலச்சட்டங்களின் பிரகாரம் முடிக்குரியதெனப் பிரசித்தப்படுத்தப்பட்ட போருளுவேஊக்கலான, ஓர் எல, பாழ்நிலச்சட்டங்களின் பிரகாரம் முடிக்குரியதெனப் பிரசித்தப்படுத்தப்பட்ட போருளுவேஊக்கலான, ஓர் எல, பாழ்நிலச்சட்டங்களின் பிரகாரம் முடிக்குரியதெனப் பிரசித்தப்படுத்தப்பட்ட போருளுவேஊக்கலான, ஓர் எல (நீரோட்டம்), பாழ்நிலச்சட்டங்களின் பிரகாரம் முடிக்குரியதெனப் பிரசித்தப்படுத்தப்பட்ட போருளுவேஊக்கலான.

[Kurunegala S. O. 33—1912.]

---

[Tenders for Transport of Stores from Batticaloa and Kalutara.]

மூன்று வருஷத்துக்கு அதாவது 1912 ம் ஆண்டு ஆடிமாதம் 1 ந் தேதி துவக்கம் 1915 ம் ஆண்டு ஆனிமீ 30 ந் தேதி வரைக்கும் மட்டக்களப்பு, களுத்துறை என்னும் இடங்களிலிருந்து சாமான்களை ஏற்றுமதிசெய்ய விருப்பமுள்ளவர்கள் வெவ்வேறு ஒப்பந்தக் கேள்விக்கடுதாசி அனுப்பும்படி இத்தால் கேட்கப்பட்டிருக்கின்றது.

2. சொந்திருத்து ஒப்பந்தக்கேள்விகளை இரண்டு கொப்பிகளில் எழுதி ஒரே தபாலுறையில் வைத்து முத்திரையிட்டு "பிரதான சிவில் மெடிக்கல் ஆபிசர் கொழும்பு" என்று மேல்விலாசமும் எழுதி அனுப்பல் வேண்டும்.

3. கேள்விக்கடுதாசிகளை பிரதான சிவில் மெடிக்கல் ஆபிசர் கந்தோரில் இதற்காக வைக்கப்பட்டிருக்கும் பெட்டியிற் போடவேண்டும் அல்லது தபால் மார்க்கமாய் அங்கே அனுப்பவேண்டும்.

4. கேள்விக்கடுதாசிகள் அனுப்பப்படும் உறையின் புறத்தில் இடதுகை மேல்மூலையில் "ஏற்றுமதிசெய்வதற்காக அனுப்பப்படும் ஒப்பந்தக் கேள்விககடுதாசி" என்று எழுதல் வேண்டும். கேள்விக்கடுதாசிகள் பிரதான சிவில் மெடிக்கல் ஆபிசர் கந்தோரில் 1912 ம் வருஷம் ஆனிமாதம் 4 ந் தேதி மத்தியானத்துக்குப் பிந்தாமல் சேரல்வேண்டும்.

5. அச்சிட்ட கொந்திருத்து ஒப்பந்தக் கேள்விக்கடுதாசிகளில் மாத்திரம் ஒப்பந்தக் கேள்விகள் எழுதி அனுப்ப வேண்டும். இந்தக் கேள்விப்பத்திரங்கள் கொழும்பு பிரதான சிவில் மெடிக்கல் ஆபிசில் பெற்றுக்கொள்ளலாம். அச்சிட்டு இதற்கென்று நியமிக்கப்பட்டிருக்கும் கேள்விப்பத்திரத்தில் எழுதப்படாத கேள்விகள் கவனிக்கப்படமாட்டா. இந்தக் கேள்விப்பத்திரத்தில் யாதேனும் மாற்றங்கள் செய்தால் அம்மாற்றங்களுக்கு ஒப்பந்தக்கேள்விக்காரன் கையொப்பமிடல் வேண்டும். அப்படிச் செய்யத் தவறினால் கேள்வி சரியீனமாகக்கண்டு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

6. அச்சிட்ட ஒப்பந்தக் கேள்விப்பத்திரம் பெறவிரும்புவோர் ஒவ்வொருவரும் ஐம்பது ரூபா முற்பணமாகக் கச்சேரியில் கட்டிப் பற்றுச்சீட்டுக் கொண்டுவரல் வேண்டும். கொந்திருத்துக் கேள்விகள் எழுதியனுப்பினதன்மேல் யாராகுதல் கொந்திருத்தைக் கையேற்க அல்லது தக்க பிணைகொடுக்கத் தவறினால், அவரால் முற்பணமாகக் கட்டப்பட்ட காசு முடிக்காய்விடும். அப்படி கட்டப்பட்ட கொந்திருத்துக்காரனின் பேர் கவண்மேந்தில் யாதொரு கொந்திருத்தும் எடுக்க ஏலாமல் அரசாட்சியாரின் பத்திரிகையில் (Defaulting List) போடப்படும். கொந்திருத்து ஒப்பந்தந் தீர்ந்து ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தக்காரன் கையொப்பம் வைத்ததன்மேல், ஒத்துக்கொள்ளப்படாத மற்றக் கொந்திருத்துக் கேள்விக்காரர் கட்டிய பணத்தொகை முழுவதும் அவர்களுக்குக் கொடுக்கப்படும்.

7. ஏற்றுக்கொள்ளப்பட்ட கொந்திருத்து ஒப்பந்தக்காரன் பணப்பிணை 100 ரூபா கொடுக்கவும் ஒப்பந்தத்தைச் சேர்ந்த உறுதிக்குக் கையொப்பம் வைக்கவும் வேண்டும். கேள்விப்பத்திரத்தின்பேரால் முற்பணமாகக் கட்டிய தொகை பிணையில் ஓர் பகுதியாகக் கவனிக்கப்படும். இன்னும் தேவையான விவரங்கள் பிரதான சிவில் மெடிக்கல் ஆபீசரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

8. மேற்கூறிப்போந்த பொருத்தங்கள் எல்லாவற்றிற்கும் அமையாத ஒப்பந்தக்கேள்வி ஒன்றும் அங்கீகரிக்கப்படமாட்டாது.

9. ஒப்பந்தக்கேள்விகளில் யாதேனும் ஒன்றையாவது அல்லது முழுமையையாவது ஏற்றுக்கொள்ளாது தள்ளும் உரித்தும் அவைகளில் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் உரித்தும் கவர்ணமேந்தாருக்குண்டு.

10. இன்னும் தேவையான விவரங்களை கொழும்பு பிரதான சிவில் மெடிக்கல் ஆபிசரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

(கையொப்பம்) எவ். ஜி. மோரவி,
பிரதான சிவில் மெடிக்கல் ஆபிசருக்காக.

கொழும்பு, 1912 ம் ஆண்டு வைகாசிமீ 15 ந் திகதி.

---

[Tenders for provisioning Jaffna Hospital.]

பின்னால் வரும் அட்டவணையிற் காணப்படும் ஆசுபத்திரிக்கு 1912 ம் அண்டு ஆடிமீ 1 ந் திகதி தொடக்கம் 1913 ம் ஆண்டு ஆனிமீ 30 ந் திகதி வரைக்கும் தேவையான சாப்பாட்டு சாமான்களை கொந்திருத்து ஒப்பந்தம்செய்ய விருப்பமுள்ளவர்கள் ஒப்பந்தக் கேள்விக்கடதாசி அனுப்பும்படி இத்தால் கேட்கப்பட்டிருக்கின்றது.

2. கொந்திருத்து ஒப்பந்தக்கேள்விகளை இரண்டு கொப்பிகளில் எழுதி ஒரே தபாலுறையில் வைத்து முத்திரையிட்டு, "கொந்திருத்து ஒப்பந்த விசாரணைச் சங்கத்தலைவர் (The Chairman of the Tender Board) அரசிறைவருமானத்தலைவர் கந்தோர் (Office of the Controller of Revenue) கொழும்பு" என்று மேல்விலாசமும் எழுதி அனுப்பல் வேண்டும்.

3. ஒப்பந்தக் கேள்விக்கடுதாசிகளை அரசிறைவருமானத்தலைவர் கந்தோரில் இதற்காக வைக்கப்பட்டிருக்கும் பெட்டியிற் போடவேண்டும் அல்லது தபால்மார்க்கமாய் அங்கே அனுப்பவேண்டும்.

4. ஒப்பந்தக் கேள்விக்கடுதாசிகள் அனுப்பப்படும் உறையின் புறத்தில் இடது கை மேல்மூலையில் "ஆசுபத்திரிக்குச் சாப்பாட்டுச் சாமான்கள் கொடுத்தற்காக அனுப்பப்படும் ஒப்பந்தக் கேள்விக்கடுதாசி" என்று எழுதல் வேண்டும். கேள்விக்கடுதாசிகள் அரசிறைவருமானத்தலைவர் கந்தோரில் 1912 ம் ஹூ ஆனிமீ 18 ந் தேதி மத்தியானத்துக்குப் பிந்தாமல் சேரல்வேண்டும்.

5. அச்சிட்ட கொந்திருத்து ஒப்பந்தக் கேள்விக்கடுதாசிகளில் மாத்திரம் ஒப்பந்தக் கேள்விகள் எழுதி அனுப்ப வேண்டும். இந்தக் கேள்விப்பத்திரங்கள் கொழும்பு பிரதான சிவில் மெடிக்கல் ஆபிசில் பெற்றுக்கொள்ளலாம். அச்சிட்டு இதற்கென்று நியமிக்கப்பட்டிருக்கும் கேள்விப்பத்திரத்தில் எழுதப்படாத கேள்விகள் கவனிக்கப்படமாட்டா. இந்தக் கேள்விப்பத்திரத்தில் யாதேனும் மாற்றங்கள்செய்தால் அம்மாற்றங்களுக்கு ஒப்பந்தக் கேள்விக்காரன் கையொப்பமிடல் வேண்டும். அப்படிச் செய்யத் தவறினால் கேள்வி சரியீனமாகக்கண்டு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

6. அச்சிட்ட ஒப்பந்தக் கேள்விப்பத்திரம் பெறவிரும்புவோர் பின்வரும் அட்டவணையின்படி முற்பணம் கச்சேரியில் கட்டிப் பற்றுச்சீட்டுக் கொண்டுவரல் வேண்டும். கொந்திருத்துக் கேள்விகள் எழுதியனுப்பினதன்மேல் யாராகுதல் கொந்திருத்தைக் கையேற்க அல்லது தக்கபிணை கொடுக்கத் தவறினால், அவரால் முற்பணமாகக் கட்டப்பட்ட காசு முடிக்காய்விடும். அப்படி கட்டப்பட்ட கொந்திருத்துக்காரனின் பேர் கவண்மேந்தில் யாதொரு கொந்திருத்தும் எடுக்க ஏலாமல் அரசாட்சியாரின் பத்திரிகையில் (Defaulting List) போடப்படும், கொந்திருத்து ஒப்பந்தந்தீர்ந்து ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தக்காரன் கையொப்பம் வைத்ததன்மேல், ஒத்துக்கொள்ளப்படாத மற்றக் கொந்திருத்துக் கேள்விக்காரர் கட்டிய பணத்தொகை முழுவதும் அவர்களுக்குக் கொடுக்கப்படும். பிரதம சிவில் மெடிக்கல் ஆபிசர் கந்தோரில் முற்பணம் ஏற்கப்படமாட்டாது.

7. சாமான் மாதிரிகள் கேட்கும்போது கொடுக்கவேண்டும்.

8. ஏற்றுக்கொள்ளப்பட்ட கொந்திருத்து ஒப்பந்தக்காரன் பின்வரும் அட்டவணையின்படி பணப்பிணை கொடுக்கவும் ஒப்பந்தத்தைச்சேர்ந்த உறுதிக்குக் கையொப்பம் வைக்கவும் வேண்டும். கேள்விப்பத்திரத்தின்பேரால் முற்பணமாகக் கட்டிய தொகை பிணையில் ஓர் பகுதியாகக் கவனிக்கப்படும். இன்னும் தேவையான விவரங்கள் பிரதான சிவில் மெடிக்கல் ஆபீசரிடம்பெற்றுக்கொள்ளலாம்.

9. மேற்கூறிப்போந்த பொருத்தங்கள் எல்லாவற்றிற்கும் அமையாத ஒப்பந்தக்கேள்வி ஒன்றும் அங்கீகரிக்கப்படமாட்டாது.

10. ஒப்பந்தக்கேள்விகளில் யாதேனும் ஒன்றையாவது அல்லது முழுமையையாவது ஏற்றுக்கொள்ளாது தள்ளும் உரித்தும் அவைகளில் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் உரித்தும் கவர்ணமேந்தாருக்குண்டு.

11. இன்னும் தேவையான விவரங்களை கொழும்பு பிரதான சிவில் மெடிக்கல் ஆபிசரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

(கையொப்பம்) எவ். ஜீ. மோர்லி,
பிரதம சிவில் மெடிக்கல் ஆபிசருக்காக.

கொழும்பு, 1912 ம் ஆண்டு வைகாசிமீ 29 ந் உ.

அட்டவணை.

| இடம். | சாப்பாட்டுச்சாமான்களின் விவரம். | முற்பணத்தின் தொகை. ரூ. | பணப்பிணையின் தொகை. ரூ. |
|---|---|---|---|
| யாழ்ப்பாணம் ஆசுபத்திரி .. | சமைத்த சாப்பாடு, பாலும் ... | 200 .. | 400 |

[Tenders for supplying Materials for Salt Stores, Jaffna.]

சாமான்கள் கொடுக்கிறதற்குக் கேள்விப்பத்திரம்.

நாற்கடகம், ஓலைப்பாய், ஓலைமடல், தேங்காய் எண்ணெய், ஆமணக் கெண்ணெய், மண்ணெண்ணெய், பனையோலை, தும்புக்கட்டு, ஈக்குக்கட்டுக் கூட்டத்தடி, தும்புக்கயிறு, சாக்கு என்னும் இந்தச் சாமான்கள் கேட்குநேரமே யாழ்ப்பாணம் உப்புமால் சிவியாதெரு உப்பளம், தொண்டமனூர் உப்புக்குதம் ஆகிய இந்த விடங்களில் கொடுக்கிறதற்கு 1912 ம் ஆண்டு ஆடிமீ 1 ந் திகதி தொடக்கம் 1913 ம் ஆண்டு ஆனிமீ 30 ந் தகதி வரையில் ஒப்பந்தம் கேட்க விரும்புவருடைய கேள்விப்பத்திரங்கள் ஏற்கப்படும்.

2. கேள்விப்பத்திரம் இணைப்பிரதியாயும் முத்திரையிடப்பட்டதாயு மிருத்தல் வேண்டும். மூலப்பிரதி வடமாகாண ஏசன்றுத்துரை அவர்களுக்கும் இணைப்பிரதி கொழும்பு அரசிறைவருமானத்தலைவர் கந்தோருக்கும் விலாசம் போட்டிருத்தல் வேண்டும்.

3. கேள்விப்பத்திரம் கேள்விக்காரன் தானுகக் கொடுக்கலாம் அல்லது தபாலில் அனுப்பலாம். இரண்டு பிரதிகளும் ஒரே நேரத்தில் அனுப்பப்படல் வேண்டும்.

4. கேள்விப்பத்திரத்தில் "Tender for supplying Materials 1912–13" என்று உறையின் இடது பக்க மேல்மூலையில் போடப்பட்டிருத்தல் வேணும். அப்பத்திரம் யாழ்ப்பாணக் கச்சேரியில் 1912 ம் ஆண்டு ஆனிமாதம் 18 ந் திகதி பின்பகல் 2 மணிக்குமுன் சேரவேண்டும்.

7. கேள்விப்பத்திரம் எழுதும் மாதிரிக்கடுதாசி யாழ்ப்பாணம் கச்சேரியில் கேட்டுப் பெற்றுக்கொள்ளலாம் அந்த மாதிரிக் கடுதாசியில் எழுதாத வேறு எவ்விதப் பத்திரமும் ஏற்கப்படமாட்டாது. மாற்றங்களுக்கு கையொப்ப முதலெழுத்தக விடப்படவேண்டும். அல்லாவிடில் கேள்விப்பத்திரங்கள் பிழையென விலத்தப்படும்.

6. கச்சேரியில் ரூபா 20 கட்டிப் பற்றுச்சீட்டுக் காட்டினவருக்கே மாதிரிக் கடுதாசி கொடுபடும். ஒருவருடைய ஒப்பந்தக் கேள்வியை ஏற்றுக்கொண்டதென்று அறிவித்தல் அவர் கேட்ட நாள்தொடக்கம் பத்து நாளைக்குள் ஒப்பந்தம் ஏற்க பிணைகொடுக்க அல்லது உறுதிமுடிக்க தவறினுல், கட்டின காசு கவுண்மேந்துக்கு இனுமாகும். அப்படித் தவறினவர் கவுண்மேந்து ஒப்பந்தங் கொடுக்கப்படாதென்று விலக்கப்பட்ட ஒப்பந்தக்காரருடைய பெயர் பதியப்படும் இடாப்பில் பதியப்படுகிறதற் காளாவர். ஒப்பந்தம் கைச்சாத்திட்டு முடிவானவுடன் மற்றக் கேள்விக்காரருடைய காசு திருப்பிக் கொடுபடும்.

7. ஒவ்வொரு கேள்விப்பத்திரத்தோடு இரண்டு தகுதியான பேர் பிணை நிற்போமென்று சம்மதம் காட்டும் பத்திரமும் அனைத்திருக்கவேண்டும். அவர்களுடைய விலாசமும் காட்டியிருக்கவேண்டும்.

8. ஒப்பந்தம் கொடுக்கும் நாளில் கொடுக்கவேண்டிய சாமான்களுக்கு மாதிரிப் பொருட்களுங் கொடுக்கவேண்டும்.

9. ஒப்பந்தத்தைச் சரியாய் ஒப்பேற்றுவதற்காக போதிய பிணைகாரர் பிணையுறுதிக்குச் சேரவேண்டும். பிணையுறுதியின் தொகையும் வேறுவித தேவையான விபரங்களும் கந்தோரில் கேட்டுக்கொள்ளலாம்.

10. மேற்சொல்லப்பட்ட பிரமாணங்களுக்கு அமையாத யாதொரு கேள்விப்பத்திரமும் கவனிக்கப்படமாட்டாது.

11. எந்தக் கேள்விப்பத்திரத்தையும் அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்க அல்லது நியாயம் சொல்லாது மறுக்க முழு உரித்தும் கவண்மேந்துக்கு உண்டு.

எச். எம். எம். மூர்,
அரசாட்சி ஏசன்றுக்காக.

யாழ்ப்பாணக் கச்சேரி,
1912 ம் ஞு வைகாசிமீ 13 ந் உ.

[Tenders for Lease of Rubber Trees in Hospital Compound at Koslanda, Badulla District.]

கொஸ்லாந்த ஆசுப்பத்திரிக்குரிய நிலத்தில் நிற்கும் றப்பர் மரங்களின் குத்தகையை விற்பதற்காய் ஊவா மாகாண ஏசண்டுத்துரை அவர்களால் 1912 ம் ஞு ஜூனிமீ 28 ந் திகதி, வெள்ளிக்கிழமை மத்தியானம் 12 மணி நேர வரைக்கும் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் :—

(a) ஒரு வருஷத்துக்கு.
(b) மூன்று வருஷத்துக்கு.

கேள்விப்பத்திரம் போடுபவர்கள் அந்நிலத்திலுள்ள தேயிலைச்செடிகளை வேரோடு பிடுங்கி நிலத்தைத் துப்பரவாய் வைத்திருப்பதற்கும், மரங்களுக்குப் பழுது நேரிடா வண்ணமும் எத்தனங்கள் எடுக்க வேண்டியது.

கேள்விப்பத்திரத்தின் மேல் உறையின் இடது மூலையில் மேற் காட்டியபடி ஒரு வருஷத்துக்கோ அல்லது மூன்று வருஷத்துக்கோ என்றும் ஆசுப்பத்திரியினுடைய பெய்ரும் எழுதப்பட்டிருக்க வேண்டியது.

அநுகூலமான கேள்விக்காரன் கேள்வித் தொகையை முற்பணமாய் வதுளைக்கச்சேரியில் கட்ட ஆயத்தமாயிருக்க வேண்டியது.

ஜி. டபிள்யு. விக்கரமசிங்க,
கவண்மேந்து ஏசண்டுக்காக.

வதுளைக் கச்சேரி,
1912 ம் ஞு மேமீ 24 ந் உ.

[Rinderpest at Meegahagandura and Ihalakumbukwewa, Badulla District.]

தென் மாகாணத்தின் மாகம்பத்திலுள்ள இகலகும்புக் வெவவிலும், மீககசந்துற என்னும் இடத்திலும் மாடுகளுக்கு நோய் உண்டுபட்டிருப்பதால், பின்னும் காட்டப்படும் எல்லைகளுக் குட்பட்டதும், மாகம்பத்துக்கு அணைத்தாயுமுள்ள சித்தறமகோறளை 1909 ம் ஆண்டு 25 ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின் 6 ம் பிரிவின் 1 ம் பகுதிப்படி பாதுகாக்கப்படு மிடமென்று இத்தால் விளம்பரப்படுத்தப்படுகின்றது.

சித்தறம கோறளை எல்லைகளாவன : வடக்கு-கல்மில்லை வெவ ; தெற்கு-மண்டகலை ; கிழக்கு-மாணிக்ககங்கையும், கலமெடகலையும் ; மேற்கு-வளவை கங்கை.

இந்தப் பிரசித்தம் 1912 ம் ஆண்டு மேமாதம் 22 ந் திகதி தொடக்கம் கவனிக்கப்படும்.

எவ். வாட்லெற்,
ஊவா மாகாண ஏசண்டர்.

வதுளைக் கச்சேரி,
1912 ம் ஆண்டு மேமீ 22 ந் திகதி.